# 5

# அல் இஸ்லாம்

ஸிமாம்:-

அஸ்ஸலாமு அலைக்கும், நிஹாத்!

நிஹாத்:-

வஅலைக்குமுஸ்ஸலாம், ஸிமாம்!

ஸிமாம்:-

நீங்கள் நேற்றுப் பாடசாலைக்குச் சென்றீர்களா?

நிஹாத்:-

ஆம் நீங்கள் ஏன் பாடசாலைக்கு வரவில்லை?

ஸிமாம்:-

எனது மாமா சுகவீனமுற்றிருக்கிறார். நலம் விசாரிக்க வாப்பாவுடன் போயிருந்தேன்.

நிஹாத்:-

மாஷா அல்லாஹ்! நல்ல விடயம்தான். நாங்கள் நேற்று இஸ்லாம் பாடத்தில் அல் இஸ்லாம் என்ற தலைப்பில் பல விடயங்களைக் கற்றோம்.

ஸிமாம்:-

அதைப்பற்றி எனக்கும் சொல்லித் தாருங்களேன்.



நிஹாத்:-

இஸ்லாம் என்ற அரபுச் சொல்லுக்கு சாந்தி, சமாதானம், கட்டுப்படுதல், சரணடைதல் முதலான கருத்துக்கள் உண்டு. அது அல்லாஹ்வினால் அருளப்பட்ட இறுதி மார்க்கமாகும். அது ஐந்து அர்கான்களைக் கொண்டது.

ஸிமாம்:-

அர்கான் என்றால் என்ன?

நிஹாத்:-

அர்கானுல் இஸ்லாம் (இஸ்லாத்தின் தூண்கள்) என்பது 'ஷஹாதா', 'ஸலாத்', 'ஸக்காத்', 'ஸவ்ம்', 'ஹஜ்' ஆகிய ஐந்து கடமைகளையும் குறிக்கும்.

ஸிமாம்:-

ஷஹாதா என்றால் என்ன?

நிஹாத்:-

ஷஹாதா என்பது வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு

எவருமில்லை என்றும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது ரஸூல் என்றும் சாட்சி பகர்ந்து ஈமான் கொள்வதாகும்.

*ஸிமாம்:-*

*ஏனைய கடமைகள் பற்றியும் கூறுங்கள்.*

*நிஹாத்:-*

ஸலாத் என்பது ஐவேளை நிறைவேற்றப்பட வேண்டிய தொழுகையை யும் ஸகாத் என்பது வசதியுள்ளவர்கள் தமது செல்வத்திலிருந்து ஒரு பகுதியை ஏழைகளுக்கு வழங்குவதையும், ஸவ்ம் என்பது ரமழான் மாதத்தில் நோற் கப்படும் நோன்பையும், ஹஜ் என்பது வசதி வாய்ப்பு உள்ளவர்கள் புனித மக்கா சென்று நிறைவேற்றும் கடமையையும் குறிக்கும். இவை தவிர இஸ்லாத்துக்கு வேறு பல சிறப்பம்சங்களும் உண்டு.

*ஸிமாம்:-*

*அவை பற்றியும் கூற முடியுமா?*

*நிஹாத்:-*

இஸ்லாம் அல்லாஹ் அருளிய இறுதி மார்க்கம். அது இயற்கையான மார்க்கம். மனித வாழ்க்கையில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும், எக்காலங்களிலும் எவ்விடங்களிலும் பின்பற்றத்தக்க மார்க்கம். நீதி, நேர்மை, உண்மை, சகிப்புத்தன்மை. சகவாழ்வு முதலானவை அதன் சிறப்புக்களில் உள்ளன வாகும். வாழ்க்கையில் எல்லா விடயங்களிலும் இஸ்லாம் கூறும் வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நற்குணங்களும் நற்பண்புகளும் வளர்கின்றன. மேலும், அல்லாஹ் எம்மை அவதானிக்கின்றான். மறுமையில் எமது செயல்கள் பற்றி விசாரிப்பான் என்ற உணர்வு நல்வழியிற் செயற்படத் தூண்டுகின்றது.

*ஸிமாம்:-*

*இஸ்லாமிய வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதன் மூலம் எதிர்பார்க்கப் படுவது யாது?*

நிஹறாத்:-

உலக வாழ்வில் நிம்மதியும் அல்லாஹ்வின் திருப்தியும் மறுமையில் சுவன வாழ்வுமாகும்.

ஸிமாம்:-

நல்ல விடயங்கள் பலவற்றைச் சொல்லித் தந்தீர்கள். ஜஸாக்கல்லாஹு கைரா.

நிஹறாத்:-

நாம் வாழ்வில் இவற்றைப் பின்பற்றியொழுகுவோம். இன்ஷா அல்லாஹ்!

**பயிற்சிகள்**

பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.

1. இஸ்லாம் என்ற அரபுச் சொல்லின் கருத்து கட்டுப்படுதல், சரணடைதல் ஆகும். ( )
2. அர்கானுல் இஸ்லாம் என்பது இஸ்லாத்தின் அடிப்படைகளைக் குறிக்கும். ( )
3. இஸ்லாம் ஐந்து தூண்கள் மீது நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ( )
4. சகிப்புத் தன்மை, சகவாழ்வு என்பன இஸ்லாத்திற்கு அப்பாற்பட்டவை. ( )
5. இஸ்லாமிய வழிகாட்டலை அலட்சியம் செய்பவர்கள் சுவனம் செல்வர். ( )